# வலுவாதார அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சு

## தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்

## இணைந்த சேவையின் அலுவலக உதவியாளர் சேவையின் III ஆம் வகுப்பு பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பம் கோரல்

01. தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தில் நிலவும் அலுவலக உதவியாளர் சேவையின் III ஆம் வகுப்புப் பதவி வெற்றிடங்களுக்கு அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக இணைந்த சேவைப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் அனுமதியின் பேரில் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஒன்றின் பெறுபேறுகளின் படி தகுதி அடிப்படையில் உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள், நிலவும் வெற்றிடங்களுக்கு நியமனம் செய்யப்படுவர்.

03. தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம் மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை 08 ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ளது. நியமன எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி ஆகியன ஆட்சேர்ப்புக்குப் பொறுப்பான அலுவலரினால் தீர்மானிக்கப்படும். யாதேனும் எண்ணிக்கையிலான நியமனங்களை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்பாமல் விட ஆட்சேர்ப்புக்குப் பொறுப்பான அலுவலருக்கு அதிகாரம் உண்டு.

04. சம்பளம் - : இலக்கம் 03 / 2016 மற்றும் 2016.02.25 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றுநிருபத்தின் படி, அலுவலக உதவியாளர் சேவையின் III, II மற்றும் I ஆம் வகுப்புப் பதவிகளுக்கான மாதாந்த சம்பள அளவு PL 1 – 2006 – அதாவது ரூ. 24,250/= 10 X 250/= 10 X 270/= 10 X 300/= 12 X 330/= ரூ 36, 410/= ஆகும். ரூ. 27,020/= ஐத் தாண்டுவதற்கு II ஆம் வகுப்புக்கு பதவி உயர்வு பெற வேண்டியதோடு, ரூ. 29,750/= ஐத் தாண்டுவதற்கு I ஆம் வகுப்புக்கு பதவி உயர்வு பெற வேண்டியதோடு, ரூ. 32,780/= ஐத் தாண்டுவதற்கு விஷேட வகுப்புக்கு பதவி உயர்வு பெற வேண்டும். அச்சுற்றுநிருபத்தின் II ஆம் உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் கொடுப்பனவுகள் செய்யப்படும்.

05. இப்பதவி ஓய்வூதியம் உடையது. அலுவலர்களுக்குரிய ஓய்வூதிய முறைமை குறித்து அரசினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு அவர்கள் கட்டுப்பட வேண்டும். மேலும், அவர்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய முறைமைக்கு / தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய முறைமைக்கு பங்களிப்புச் செய்ய வேண்டும். அரசினால் இடைக்கிடை தீர்மானிக்கப்படுகின்ற வகையில் அவ் அலுவலர்கள் அதற்கான பங்களிப்புத் தொகையைச் செலுத்த வேண்டும்.

06. **ஆரம்ப நியமனம் பெற்ற சேவை நிலையத்தில் குறைந்தது 03 வருடங்கள் கட்டாயமாக சேவையாற்ற வேண்டும்.** எவ்வாறாயினும் ஆட்சேர்ப்புக்குப் பொறுப்பான அலுவலரால் தீர்மானிக்கப்படுகின்ற ஏதேனும் விஷேட காரணங்களின் பேரில் அக்கால எல்லை முடிவடைவதற்கு முன்னர் யாராயினும் அலுவலர் ஒருவரை இடமாற்ற வேண்டிய தேவை ஏற்பட்டால், ஆட்சேர்ப்புக்குப் பொறுப்பான அலுவலருக்கு அதற்கான அதிகாரம் உண்டு.

07. தகைமைகள் : அலுவலக உதவியாளர் சேவையின் III ஆம் வகுப்புப் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தகைமைகள் பின்வருமாறு :

(அ) இலங்கைப் பிரஜைகளாயிருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். தற்போது அரச சேவையில் உள்ள, நிரந்தர மற்றும் ஓய்வூதியத்துடனான நியமனதாரிகளுக்கு இவ் உயர் வயதெல்லை ஏற்புடையதாகாது.

(இ) நன்னடத்தை உடையவர்களாகவும் போதுமான ஆரோக்கியத்துடனும் இருத்தல் வேண்டும்.

(ஈ) கல்வித் தகைமைகள்

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வுகளில் குறைந்தது இரண்டு திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(உ) அரச சேவை ஆணைக்குழுவின் காரியக்கிரம விதிமுறைகளின் ஏ ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் அரச சேவைக்கு நியமிக்கப்படப் பொருத்தமற்ற நபரொருவராக இருத்தலாகாது.

அனைத்து விண்ணப்பதாரிகளும் இப்பதவிக்குரிய அனைத்துத் தகைமைகளையும் விண்ணப்பம் கோரப்படுகின்ற திகதியன்று அல்லது அதற்கு முன்னர் முழுமைப்படுத்தியிருப்பது கட்டாயமானதாகும்.

08. விண்ணப்பம் கோரல்

பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பிரகாரம் அலுவலக உதவியாளர் சேவைப் பதவிகளுக்கு நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| **வெற்றிடம் காணப்படும் சேவை நிலையம்** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** |
|---|---|
| பிரதான பணிமனை, பேராதனை | 3 |
| ஹக்கல தாவரவியல் பூங்கா | 1 |
| சீதாவாக்கை ஈர வலய தாவரவியல் பூங்கா | 1 |
| உலர் வலய தாவரவியல் பூங்கா, அம்பாந்தோட்டை | 1 |
| கம்பஹா தாவரவியல் பூங்கா | 1 |
| மொத்தம் | **7** |

09. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை :

இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் அவர்களின் அனுமதியின் பிரகாரம் விண்ணப்பதாரர்களது அடிப்படைத் தகைமைகளைப் பரீட்சிப்பதற்கான நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும் தினத்திலேயே நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் போது விண்ணப்பதாரர்கள் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் தகைமை ஒழுங்கைக் கண்டிப்பாக கவனத்திற் கொண்டு உரிய தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரர்கள் அலுவலக உதவியாளர் சேவையின் III ஆம் வகுப்பு நியமிக்கப்படுவர். விண்ணப்பதாரர்கள் நேர்முகப்பரீட்சையை எதிர்கொள்ள விரும்பும் மொழி மூலத்தை தெளிவாக விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட வேண்டியதோடு கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை அம்மொழி மூலத்திலேயே நடாத்தப்படும்.

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கும் ஒழுங்கு பின்வருமாறு:

<table>
<tr><th colspan="2">பிரமாணங்கள்</th><th>புள்ளிகள்</th></tr>
<tr><td colspan="2">பதவியில் பெற்றுள்ள அனுபவம்<br>(அதிக பட்சமாக 5 வருடங்கள் கவனத்திற் கொள்ளப்படும்)</td><td>10</td></tr>
<tr><td colspan="2">தொடர்பாடல் ஆற்றல்</td><td>5</td></tr>
<tr><td rowspan="2">கல்வித் தகைமைகள்</td><td>க.பொ.த. உயர் தரத்தில் சித்தி</td><td>5</td></tr>
<tr><td>க.பொ.த. சா.த பரீட்சையில் கணிதம், மொழி, இரண்டாம் அரச கரும மொழி, ஆங்கில மொழி மற்றும் வேறு மொழிகள் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருத்தல். (ஒரு மொழிக்கு 2 புள்ளிகள் வீதம் அதிக பட்சமாக 5 பாடங்கள் கவனத்திற் கொள்ளப்படும்.)</td><td>10</td></tr>
<tr><td colspan="2">ஆளுமை</td><td>5</td></tr>
<tr><td colspan="2">வெளிக்களச் செயற்பாடுகள் (விளையாட்டு / சமூக சேவை .......ஆகியன)</td><td>5</td></tr>
<tr><td colspan="2">நேர்முகப்பரீட்சையின் போது காட்டும் திறமைகள்</td><td>10</td></tr>
<tr><td colspan="2">மொத்தப் புள்ளிகள்</td><td>50</td></tr>
</table>

குறிப்பு : பதவியில் பெற்றுள்ள அனுபவம், கல்வித் தகைமைகள் மற்றும் வெளிக்களச் செயற்பாடுகள் ஆகியன ஏற்றுக்கொள்ளத்தக்க சான்றிதழ்கள் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அத்தகைமைகள் விண்ணப்பம் கோரப்படுகின்ற இறுதித் திகதியன்று செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.

10. விண்ணப்பப் படிவத்தை நிரப்பும் போது அதிக கவனமெடுத்து பிழையற்ற தகவல்களை வழங்க வேண்டும். தகைமைகளைப் பரீட்சிக்கும் போது யாரேனும் விண்ணப்பதாரர் ஒருவர் தகுதியற்றவர் எனத் தெரியவரின் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பத்தை நிராகரிக்க முடியும். விண்ணப்பதாரர் ஒருவர் வழங்கிய தகவலொன்று எந்தவொரு சந்தர்ப்பத்திலேனும் பிழையானது எனத் தெரிய வந்தால் அவரை அரச சேவையிலிருந்து நீக்க முடியும்.

11.1 உரிய மாதிரிக்கேற்ற விண்ணப்பப் படிவங்களை 2018.09.28 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர் நாயகம், தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம், த. பெ. இலக்கம் 14, பேராதனை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்புதல் வேண்டும். உரிய மாதிரிக்கு ஏற்றதல்லாத மற்றும் சரியாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப் படிவங்கள் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். உரிய முறையில் விண்ணப்பப் படிவங்களை நிரப்பாமையினால் ஏற்படும் நஷ்டங்களை விண்ணப்பதாரர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

11.2 விண்ணப்பப் படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் **அலுவலக உதவியாளர் சேவையின் III ஆம் வகுப்புக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்** என குறிப்பிட வேண்டும்.

12. இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டிருப்பவர்கள் மாத்திரம் விண்ணப்பிப்பர் என்ற எடுகோளின் அடிப்படையில் உரிய திகதியன்று அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பிய விண்ணப்பதாரிகள் அனைவரும் தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் தலைவரால் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். எனினும் அவ்வாறு அழைக்கப்படுவது விண்ணப்பதாரிகள் இப்பதவிக்குரிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளனர் என்பதனை ஏற்றுக்கொள்வதாக கருதப்படமாட்டாது. விண்ணப்பதாரிகளை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து அறிவித்தலின் பிரகாரம் தகைமைகள் உள்ளனவா என பரீட்சிக்கும் சந்தர்ப்பத்தில் தேவையான தகைமைகள் இல்லை எனத் தெரிய வந்தால் அத்தகையவர்களது அபேட்சக நிலை ரத்துச் செய்யப்படும்.

13. விண்ணப்பதாரிகளது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு பின்வரும் ஆவணங்களில் ஒன்றை நேர்முகப் பரீட்சைக் குழாமுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

I. ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டை.

II. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு.

III. செல்லுபடியாகும் வாகன செலுத்தல் அனுமதிப்பத்திரம்

14. இங்கு குறிப்பிடப்படாத ஏதும் விடயங்கள் இருப்பின், அது தொடர்பில் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் தீர்மானம் மேற்கொள்வார். அனைத்து விண்ணப்பதாரிகளும் இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொது விதிமுறைகளின் பிரகாரம் செயற்படும் கடப்பாடுடையவர்களாவர்.

இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் அவர்களின் கட்டளைப் பிரகாரம்

கையொப்பம்
கலாநிதி. எஸ். ஏ. கிரிஷ்ணராஜா
தேசிய தாவரவியல் பூங்காக்கள் பணிப்பாளர் நாயகம்.

17 செப்டம்பர் 2018

தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்,

த. பெ. இலக்கம் 14,

பேராதனை.

**<u>வலுவாதார அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சு</u>**

**<u>தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்</u>**

**<u>அலுவலக உதவியாளர் சேவையின் III ஆம் வகுப்புக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பப் படிவம்</u>**

(அலுவலகப் பாவனைக்கு)

விண்ணப்பிக்கும் மொழி மூலம்

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

எதிர்பார்க்கும் சேவை நிலையம்

01. 1.1 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)

..................................................................................................................................
..................................................................................................................................

(உதா: HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 இறுதியில் வரும் பெயரை ஆரம்பத்திலும் ஏனைய பெயர்களின் முதல் எழுத்துக்களைப் பின்னாலும் இட்டு பெயரை எழுதவும். (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்):

..................................................................................................................................

(உதா: GUNAWARDHANA H.S.K.)

1.3 முழுப்பெயர் (தமிழில்).

..................................................................................................................................
..................................................................................................................................

02. 2.1. நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)

..................................................................................................................................
..................................................................................................................................

2.2 நிரந்தர முகவரி (தமிழில்).

..................................................................................................................................
..................................................................................................................................

03. ஆண் / பெண்:

ஆண் - 0

பெண் - 1 (உரிய இலக்கத்தைக் கூட்டில் எழுதவும் )

3.2 தேசிய அடையாள அட்டை இலக்கம்

3.3 தொலைபேசி இலக்கம்

3.4 திருமணமானவரா ? ....................................................................................

04. 4.1. பிறந்த திகதி : வருடம் :................. மாதம் : ...................... நாள்: ................

4.2. 2018.09.28 ஆம் திகதியன்று வயது :

வருடம் :.................மாதம் :....................நாள்: ..............

05. கல்வித் தகைமைகள் : -

5.1 க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை பற்றிய விபரங்கள் (முதலாம் அமர்வு)

i. பரீட்சை வருடம் மற்றும் மாதம் : ..........................................................................

ii. பரீட்சை இலக்கம் : ..............................................................................................

iii. பெறுபேறு : ........................................................................................................

| **பாடம்** | **சித்தி** | **பாடம்** | **சித்தி** |
|---|---|---|---|
| 01. | | 06. | |
| 02. | | 07. | |
| 03. | | 08. | |
| 04. | | 09. | |
| 05. | | 10. | |

5.2 க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை பற்றிய விபரங்கள் (இரண்டாம் அமர்வு)

i. பரீட்சை வருடம் மற்றும் மாதம் : ..........................................................................

ii. பரீட்சை இலக்கம் : ..........................................................................................................

iii. பெறுபேறு : ........................................................................................................................

| **பாடம்** | **சித்தி** | **பாடம்** | **சித்தி** |
|---|---|---|---|
| 01. | | 06. | |
| 02. | | 07. | |
| 03. | | 08. | |
| 04. | | 09. | |
| 05. | | 10. | |

5.3 க.பொ.த. உயர் தரப் பரீட்சை பற்றிய விபரங்கள்

i. பரீட்சை வருடம் மற்றும் மாதம் : ..........................................................................

ii. பரீட்சை இலக்கம் : ..........................................................................................................

iii. பெறுபேறு : ........................................................................................................................

| **பாடம்** | **சித்தி** |
|---|---|
| 01. | |
| 02. | |
| 03. | |
| 04. | |

06. வேறு கல்வித் தகைமைகள் / தொழில் தகைமைகள் / அனுபவம்

..........................................................................................................................................................
..........................................................................................................................................................
..........................................................................................................................................................
..........................................................................................................................................................
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

07. விளையாட்டு மற்றும் வெளிக்களச் செயற்பாடுகள்

..........................................................................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................

08. நீர் எப்பொழுதாவது ஏதும் குற்றமொன்றுக்கு நீதிமன்றமொன்றால் தண்டனை விதிக்கப்பட்டுள்ளீரா ?

(உரிய கூட்டில் ( √ ) அடையாளத்தை இடுக.) அப்படி ஏதும் இருப்பின் விபரங்களைக் குறிப்பிடுக

| ஆம் | இல்லை. |
|---|---|
| ☐ | ☐ |

..........................................................................................................................................
..........................................................................................................................................

09. விண்ணப்பதாரியின் பிரகடனம்:

(அ) இவ்விண்ணப்பப் படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கு எட்டிய வகையில் உண்மையானவையும் சரியானவையுமாகும் எனப் பிரகடனப்படுத்துகின்றேன். இதில் ஏதும் பகுதியை நிரப்பாமல் விடுவதனால் மற்றும் / பிழையாக நிரப்புவதனால் ஏற்படும் நட்டத்தை ஏற்றுக்கொள்ள இணங்குகின்றேன். மேலும், இதன் அனைத்துப் பகுதிகளும் சரியாக நிரப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றேன்.

(ஆ) என்னால் மேற்கொள்ளப்பட்டுள்ள இப்பிரகடனம் பொய்யானதென உறுதியானால், பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு முன்னரே தகுதியற்றவராக ஆவேன் எனவும் நியமனம் பெற்ற பின்னர் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுவேன் எனவும் பிரகடனப்படுத்துகின்றேன்.

(இ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்தத் தரவையும் பின்னர் மாற்ற மாட்டேன்.

திகதி :................................................ ..............................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்.